4th September 1958]

SRI A. GOVINDASAMY : தென்னுற்காடு மாவட்டத்தில் பொறுக்கு விதைகளை மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் வழங்கிவந்தார்கள். ஆனால் அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் பொருக்கு விதைகளை வழங்கும் அதிகாரத்தை மார்க்கெட்டிங் கமிட்டிக்கே கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டாலும், அல்லது என்னிடம் தெரிவித்தாலும் அதை நான் கவனிக்கிறேன்.

SRI K. R. VISWANATHAN : திருச்சி ஜில்லாவிலும், தென்னுற்காடு ஜில்லாவிலும் ஒவ்வொரு ஏக்கரிலும் உண்டாக்கக் கூடிய விதைகளின் அளவில் வித்தியாசம் இருக்கக் காரணம் என்ன ? திருச்சி ஜில்லாவில் குறைந்த அளவில் இருப்பதை அதிகப்படுத்த அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பதைப் பற்றி என்னுடைய பதிலிலேயே சொன்னேன். நிலத்தின் தரம், விவசாய முறைகள் இவைகளைப் பொருத்துத்தான் இருக்கும் பொறுக்கு விதைகள்.

Salary of Members of the Legislature

* 41 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to increase the salary of the Members of the Legislature?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI K. VINAYAKAM : Without importing any personal interest in this subject, may I ask whether the Government are aware of the fact that in the midst of a raising cost of living and rising prices, there is every justification for raising the salary of Members?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not our intention that Members should subsist on this salary alone. This salary is intended for the purpose of assisting the Members in their work in their constituencies. For eking out their livelihood, they have to make their own arrangements perhaps by pursuing their professions.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், தற்போது அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, அங்கத்தினர்களுடைய தொகுதிக்குள் செய்ய வேண்டிய வேலைக்கு இன்னும் அதிகம் பணம் கிடைத்தால் இன்னும் அதிகமான வேலை செய்ய முடியும் என்று அமைச்சர் கருதி, சம்பளத்தை அதிகப்படுத்த முன் வருவாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது இருக்கக்கூடிய நிதி நிலைமையை அனுசரித்து, இதை அதிகப்படுத்த முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : "டெய்லி அலவன்ஸாவது" உயர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப் பற்றித் தீர்மானம் ஒன்று கொண்டுவந்து, அதை இந்தச் சபையில் ஏகமனதாக நிறைவேற்றினால் அரசாங்கம் கவனிக்கும்